Thiru K. VINAYAKAM : Whereas the Madras State Transport is a very consumer of petrol and liesel oil and whereas the commission on the purchase of these would go to the coffers of the Government, will the Government think in terms of maintaining their own petrol buwnk in all workshops where the buses stay during nights?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப்பற்றி செயற் குறிப்பு இப்பொழுது இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதுபோல அரசாங்கப் போக்குவரத்துத் துறை இது போன்ற பெட்ரோல் பங்குகளை, பெட்ரோல், டீசல் ஸ்டேஷன்களை ஆரம்பிக்கலாம் என்பது விவாதத்திற்குரிய ஒரு பிரச்னை.

அரசுப் பேருந்து விபத்துக்கள்

***565 வினா.—திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கடந்த 1969-ம் ஆண்டு டிசம்பரில் மட்டும் அரசினர் பேருந்துகள் எத்தனை இடங்களில் விபத்துகளுக்கு உள்ளாயின?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நூற்று முப்பத்து ஒன்று இடங்களில்.

***566 வினா.—திரு. ஆர். கருப்பையா:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னையில் 1969-ம் ஆண்டு, அக்டோபர் 6-ந் தேதி, இரண்டு அரசாங்க பஸ்கள் மோதிக்கொண்டது உண்மையா?

(இ) இதனால் எத்தனை பேர் படுகாயமுற்றனர்?

(உ) இந்த விபத்திற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) ஒரு விபத்தில் 21 பேர்களும் மற்றொரு விபத்தில் 19 பேர்களும் காயமுற்றனர்.

(உ) பேருந்து ஓட்டுநர்களின் கவனக்குறைவினால் விபத்துக்கள் நேர்ந்தன.

முற்பகல் 9-30 **திரு. கொ. இர. ஞானசம்மந்தன் :** தலைவர் அவர்களே, இப் பொழுது மெயின்டினன்ஸ் சரியாக இல்லாததால், இப்படிப்பட்ட ஆக்ஸிடெண்ட்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பராமரிப்புச் சரியாக இல்லாததால் விபத்துக்கள் ஏற்படுவதாகச் சொல்ல முடியாது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இம்மாதிரி விபத்துக் கள் ஏற்பட்டால், பஸ்களுடைய ஓட்டுநர்கள், ட்ரைவர்கள், அல்லது சம்பந்தப்பட்ட அலுவலர்கள்மீது போலீசார் நடவடிக்கை எடுத்தபோது, கோர்ட்டில் வழக்கு பதிவு செய்தால், அப்படிப்பட்ட ட்ரைவர்களுக்கு வாரண்டு சர்வ் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது என்பது வாஸ்த வமா? அடிக்கடி ட்ரைவர்களை மாற்றுவதால், அதைப் பற்றிய விவ ரங்கள் தெரியாததால், வாரண்ட் ஒரு ஆண்டுகாலமாகியும் சர்வ்

1970 மார்ச் 26]

பண்ண முடியாத நிலை அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிகழ்ச்சி, with the permission of the Chair I would say என்னுடைய காரையே அடித்த ட்ரைவர் இன்னமும் அறிவிக்கப்படாமல், வாரண்ட் சர்வ் செய்ய முடியாத நிலை இருக்கிறது. இப்படிப் பல்வேறு பஸ்களில் ட்ரைவர்கள் மாற்றப்படுவதால், அந்த விவரம் தெரியாததால், ஏற்படும் இப்படிப்பட்ட நிலைமையைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் ஒரு வழக்கறிஞர். வாரண்ட் சர்வ் செய்ய வேண்டும் என்றால், குறிப்பிட்ட இலாகாவில் வேலை செய்பவர்களுக்கு through the Head of the Department கொடுக்கலாம் டைரக்டரிடம் அனுப்பினால், அவர்கள் சர்வ் செய்து கோர்ட்டுக்கு அனுப்புவார்கள்.

திரு. ஜே. கருணாநாதன் : தலைவர் அவர்களே, இந்த விபத்துக்களுக்கு ட்ரைவர்களுடைய கவனக் குறைவு காரணமா அல்லது பஸ்கள் பழுதுபட்டிருப்பது காரணமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பல காரணங்கள் உண்டு விபத்துக்களுக்கு.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, விபத்துக்கு அடிப்படைக் காரணம் ப்ரேக்குகளை சரியான முறையில் பராமரிக்க போதிய ஸ்டாப்புக்கள் இல்லை என்ற கருத்து இருக்கிறதே, அதைச் சரிசெய்தால், விபத்துக்கள் தடுக்கப்பட்டு நிறுத்தலாம் என்பதால், அதன்மேல் நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மெயின்டினன்ஸ் சரியானபடி இல்லாததால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பது இல்லை. ஒரு பஸ் வெளியிலே போகும்போது, நன்றாகப் பரிசீலிக்கப்பட்டு, தொழிலாளர்கள் பிரேக் சரியாக இருக்கிறதா என்பதையெல்லாம் சரிபார்த்துத்தான் அனுப்புகிறார்கள். விபத்துக்களுக்கு பல காரணங்கள். அதன் பெயரே "ஆக்ஸிடெண்ட்", எதிர்பாராமல் ஏற்படுகிறது. (சிரிப்பு)

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, ஓட்டுநர்கள் வேகமாக ஓட்டுவதால்தான் ஆக்ஸிடெண்டுகள் ஏற்படுகின்றன. ஆகவே, துரித பஸ்களுக்கு இவ்வளவு மைலுக்கு மேல் போகக்கூடாது என்ற நிபந்தனையை வைத்து, சிலிங் வைத்து, பஸ்களை ஓட்ட அரசாங்கம் முயற்சிக்குமா? ஜப்பான் போன்ற நாடுகளில் ட்ரைவரின் குடும்பத்தினரின் படங்களை, மனைவி, பிள்ளைகளுடைய படங்களை ஓட்டுநர்கள் முன்னால் வைத்து, அதைப் பார்த்தாவது அவர்கள் ஜாக்கிரதையாக ஓட்டுவார்கள் என்று செய்யப்படுவதுபோல் நம்முடைய அரசாங்கமும், அரசு பஸ்களில் குடும்பத்தினரின் படங்களை வைக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசாங்க பஸ்களில் அவர்கள் குடும்பத்தினரின் படங்களை வைக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறார்கள். ஒரு வேளை மனைவியின் படத்தைப் பார்த்துக்கொண்டு வேகமாக ஓட்டுவதால் ஆக்ஸிடெண்டுகள் அதிகமாகக் கூட ஏற்படலாம் (சிரிப்பு). குடும்பத்தினரைக் காப்பாற்றுவதை விட, பொதுமக்களைக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஆக்ஸிடெண்ட் நடைபெறுவதற்கு பல காரணங்கள் என்று சொன்னார்கள். அதிலே குறிப்பாக 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம், 6-ம் தேதி நடைபெற்ற ஆக்ஸிடெண்டுக்குக் காரணம் ஓட்டுநர் கவனக்குறைவு என்று

சொன்னார்கள். பொதுவாக ஓட்டுநர்கள் ஒரு வழித்தடத்தில் ஒருவரே இல்லாமல் அடிக்கடி மாற்றப்படுவதால், பஸ் ஓடும் ரோடுகளில் வளைவுகள் இருப்பது தெரியாமல், பெரும்பாலான ஆக்ஸிடெண்டுகள் வளைவுகள் இருக்கும் இடங்களில்தான் நடக்கிறது. ஆகவே, ட்ரைவர்களை குறைந்தது ஒரே வழித்தடத்தில் ஒரு ஆண்டுக்காலத்திற்காவது இருக்கவேண்டும், அடிக்கடி மாற்றக்கூடாது என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை ஒரு நல்ல யோசனை. அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. கே. போஜன்: தலைவர் அவர்களே, அமைச்சர் கூறிய பதிலில் கடந்த டிசம்பர் மாதத்தில் 131 இடங்களில் விபத்துகள் ஏற்பட்டன என்று சொன்னார்கள். விபத்துகளில் சம்பந்தப்பட்ட பிரயாணிகள் எத்தனை பேர்கள்? உயிர் இழப்பு ஏற்பட்டிருந்தால் எவ்வளவு? காயம் அடைந்தவர்கள் எத்தனை பேர்கள்?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The total number of insignificant accidents is 668. Deducting this from the total number of accidents 799, there were 131 accidents.

விபத்தில் உயிர் இழப்பு பற்றி செய்திக்குறிப்பு என்னிடத்தில் இப்பொழுது இல்லை.

திரு. நா. காசிராமன்: இந்த விபத்துக்களையெல்லாம் தடுக்க உண்மையான காரணங்கள் என்ன என்பதைக் கண்டுபிடிக்க உதவியாக இருக்கும் வகையில், வேகத்தைக் கண்டுபிடிக்க "கவர்னர்கள்" என்ற கருவியை வைப்பதன்மூலம் செய்யலாம். எந்த வேகத்தில் விபத்து நடந்தது என்று கண்டுபிடிக்க "டாகோகிராப்" என்ற கருவி இருக்கிறது. நகரில் ஓடும் ஒவ்வொரு பஸ்ஸிலும் வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபோன்ற இயந்திரம் பொருத்தப்பட்டு வருகிறது. மேலும் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

Fire accident in Thanjavur Municipal Market.

* 567 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there was outbreak of fire in the municipal market of Thanjavur during the first week of November 1969; and

(b) if so, the damage thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம். 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் தேதி அன்று தீ விபத்து ஏற்பட்டது.

(இ) ரூ. 4 லட்சத்திலிருந்து 5 லட்சம்வரை மொத்த இழப்பு ஏற்பட்டதென்று மதிப்பிடப்பட்டது.

திரு. கே. விநாயகம்: சார், இதுவரையில் தீ விபத்துக்கு சென்னை நகரம்தான் பிரசித்திபெற்று இருந்தது. எப்படி அது தஞ்சாவூருக்குப் போனது? அதற்குக் காரணம் யாது? அதைக் கண்டுபிடித்தார்களா? இப்படி தஞ்சாவூரிலிருந்து திருச்சிக்கு, நாகர்கோவிலுக்கு என்று ஊரெல்லாம் போவதைத் தடுக்க அரசாங்கம் யோசிக்குமா? (சிரிப்பு)